ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1927/57 - 2015 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2015.08.14

*1927 /57 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 11/80 (14).*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டாக்டர் ராஜித சேனாரத்ன,
சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு,
2015, ஓகத்து 10.

ஒழுங்குவிதிகள்

2011, பெப்புருவரி 23 ஆந் திகதிய 1694/5 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் உணவு (இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் பயனுகர்தகு காலம்) ஒழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியில் அதன் காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"ஆயினும், மேலே குறித்துரைக்கப்பட்ட பயனுகர்தகு காலமானது, இறக்குமதி செய்யப்பட்ட முழு அளவிலான பொதிகளிலுள்ள சீனி, தானியங்கள் மற்றும் அவரை இனங்கள், உடன் பழங்கள் மற்றும் மரக்கறிகள், பூடுகள், வேர்கள் மற்றும் உரிக்கப்படாதிருக்கின்ற அல்லது வெட்டப்படாதிருக்கின்ற கிழங்குகள் என்பன தொடர்பில் வலுவுறுத்தப்படுதல் ஆகாது ;

ஆயினும், பிரதான உணவு அதிகாரி, ஏதேனும் பொருளுக்கான பயனுகர்தகு காலத்தைக் குறைத்தல் பாவனையாளர் மீது ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தாதிருக்குமென பிரதான உணவு அதிகாரி திருப்திப்படுவாராயின், ஏதேனும் அத்தகைய பொருளுக்காக இவ்வொழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்கூடிய முடிவுறாத பயனுகர்வின் காலத்தை நாற்பது சதவீதத்திற்கு (40%) குறைக்கலாம்."

*8- 873*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*